# மன்னார்த்தீவில் அதானியின் காற்றாலை மின் நிலையத்தினால் மில்லியனுக்கும் அதிகமான பறவைகள் உயிரிழக்கும் அபாயம்!

## பறவையியல் துறை ஆராய்ச்சியாளர் சம்பத் செனவிரத்ன எச்சரிக்கை

இலங்கை அரசாங்கத்தின் அனுமதியுடன் இந்திய அதானி நிறுவனத்தினால் மன்னார்த் தீவில் அமைக்கப்படவுள்ள 250 மெகாவோட் காற்றாலை மின் நிலையத்தினால் வருடம் தோறும் 30 நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகின்ற ஒரு மில்லியனுக்கும் அதிகமான பறவைகள் பாரிய உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகக்கூடிய கொடிய சூழ்நிலை ஏற்படக்கூடும், என பறவையியல்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பறவைகளில் 150க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் அடங்குகின்றன எனவும், இந்தப் பிரமாண்டமான காற்றாலை மின் நிலைய அமைப்பை பறவைகளுக்கான தடுப்பாகக் கட்டுவதை நிறுத்திவிட்டு, மேலும் வடக்கே நோக்கி நகர்த்தி அதை அமைப்பதற்கு அறிவியல் பூர்வமான முடிவை அரசு எடுக்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல்துறையின் பறவைகள் தொடர்பான ஆராய்ச்சியாளரான பேராசிரியர் சம்பத் செனவிரத்ன தலைமையிலான குழுவினர் ஜிபிஎஸ் - ஜிஎஸ்எம் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி பல வருடங்களாக ஆய்வினை மேற்கொண்டுள்ளனர்.

இந்த ஆய்வின்படி, இலங்கைக்கு வருகை தந்து மன்னார்ப் பகுதியில் பறவைகள் பறந்து திரியும் பகுதியிலேயே காற்றாலையானது அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளமையினால், 'குறித்த காற்றாலை அமைப்பானது உலகம் முழுவதிலுமிருந்து இலங்கைக்கு வருகின்ற மில்லியன் கணக்கான பறவைகளுக்கு உயிரிழப்புகளை ஏற்படுத்துவது உறுதி' என பேராசிரியர் சம்பத் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

2



மாலைக்கதிர்
Maalaikkathir

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 07 திங்கட்கிழமை 19.02.2024 கதிர் 184

# நிதியின்மையால் தேர்தல் பிற்போடப்படவில்லை ஜனாதிபதியின் சதி வலையில் சிக்கவேண்டாம்!

## ஐ.ம.ச.வின் முஜிபுர் ரஹ்மான் எச்சரிக்கை




ஜனாதிபதியின் சதித்திட்ட வலையில் சிக்க வேண்டாம்!, என சிவில் அமைப்புக்களிடம் கோரிக்கை விடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துவருகின்ற அதேவேளை மறுபுறம் சிவில் அமைப்புகள் சில நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பது தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

தற்போதைய ஜனாதிபதி, பதவிக்கு வந்ததன் பின்னர் முதலாவதாக உள்ளூராட்சி

2

# இலங்கை இந்தியாவின் ஒரு பகுதியாம்! அமைச்சர் ஹரீனின் கருத்துக்கு எதிர்ப்பு

இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்த கருத்து தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்ட ஆலோசனை பெற்று வருவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு நிகழ்வொன்றின்போதே அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ அந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தின் காரணமாக அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் வழங்கப்பட்ட சத்தியப் பிரமாணம் மீறப்பட்டுள்ளது. நாட்டின் இறைமை மீறப்பட்டுள்ளது. எனவே, இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும், எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெப-40)

# தனியார் மயமாக்கலுக்கு எதிராக தொழிற் சங்கங்கள் புதனன்று கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

அரச வளங்களை விற்பனை செய்கின்ற அரசாங்கத்தின் திட்டத்திற்கு எதிராக 40 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய தேசிய வளப் பாதுகாப்பு அமைப்பு எதிர்வரும் புதன்கிழமை (21 ஆம் திகதி) கோட்டை லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்திற்கு அருகில் கண்டன ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

அரச வங்கிகள், இலங்கை மின்சார சபை, இலங்கை டெலிகொம் நிறுவனம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், மில்கோ போன்ற நிறுவனங்களை தனியார் மயமாக்குவதற்கு எதிராகவும், தபால், ரெயில்வே போன்ற நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை விற்பதற்கும் எதிரான இந்த ஆர்ப்பாட்டத்தில் குறித்த நிறுவனங்களின் ஊழியர்களும் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2

# ஜனாதிபதித் தேர்தல் சாத்தியமில்லை! பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நிரந்தரமாக இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதற்கான சாத்தியம் கிடையாது, என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தேர்தல் ஒன்று இடம்பெறுகையில் பல விதமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றமை அனைவரும் அறிந்ததே.

எமது நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அடுத்ததாக ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும். ஏதேனும்



ஒரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவில்லையாயின் அதற்கும் சில காரணங்கள்

2

# போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பற்றிய பல தகவல்கள் அம்பலமாகி வருகின்றன!

## அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்

நீண்ட காலமாக வெளிவராதிருந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பற்றிய பல உண்மைகள் இப்போது அம்பலமாகி வருவதாக பொதுமக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

டுபாயிலிருந்து போதைப்பொருள் கடத்தும் நபர்களை சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் அவர்களின் மறைவிடங்களிலிருந்து கைது செய்ய முடிந்துள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வெளிநாடுகளிலுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் புதிதாக இணைந்துள்ள போதைப் பொருள் வர்த்தகர்கள்

2

# தேர்தல்கள் குறித்து கட்சிகளுடன் பேச ஆணைக்குழு தீர்மானம்!

எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அரசியல் கட்சிச் செயலாளர்களை அடுத்த வாரம் சந்திப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, பதிவு செய்யப்பட்ட 80 அரசியல் கட்சிகளில் பாதிக் கட்சிகள் அடுத்த வாரமும் மீதமுள்ள கட்சிகள் அதற்கடுத்த வாரமும் தேர்தல் ஆணையாளரைச் சந்திக்கவுள்ளன.

இந்த வருடம் ஒக்டோபர் மாதத்திற்குள் கட்டாயமாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படல் வேண்டும், அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற நிலையில், தேர்தல் நடவடிக்கைகள் மட்டுமின்றி வாக்காளர் பட்டியல் பதிவுகள் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள்

2

# அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் நீதிமன்றை நாடும் நிலை வரும்!

## கயந்த கருணாதிலக தெரிவிப்பு

அரசாங்கத்தின் அடக்குமுறைச் செயற்பாடுகள் தொடருமாயின் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அவர், மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தொடர்பில் நாட்டு மக்கள் தொடர்ந்தும் அதிருப்தியிலேயே உள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் நாடாளுமன்றில் சில அடக்குறை சட்டமூலங்களை நிறைவேற்றி வருகின்றது.

மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் அடக்குமுறைச் செயற்பாடுகள் தொடருமாயின் எதிர்வரும் 190 நாட்களுக்குள் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை ஏற்படும்.

அப்போது நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்திற்கு தகுந்த பாடம் கற்பிப்பார்கள், என கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

# ஆண் குழந்தைகள் துஷ்பிரயோகம் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை!

பெண் குழந்தைகள், சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்வது கடுமையான குற்றமாகக் கருதப்பட்டு 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படுவதைப் போலவே, ஆண் குழந்தைகளைப் பலாத்காரம் செய்வதும் கடும் குற்றமாகக் கருதி 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை வழங்குவதை உறுதி செய்யும் வகையில், தண்டனைச் சட்டத்தில் திருத்தங்களை நீதியமைச்சு வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

இதுவரை, ஆண் குழந்தைகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்வது கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் என வகைப்படுத்தப்பட்டு, அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்க சட்ட நடைமுறைகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (04)

## தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளரை பதவி நீக்குமாறு கோரிக்கை!

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லானாவை பதவியிலிருந்து நீக்குமாறு சுகாதாரத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சுகாதார அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். சுகாதாரத் தொழிற்சங்கங்களால் சமீபத்தில் நடத்தப்பட்ட வேலைநிறுத்தத்தில் சிறு பணியாளர்கள் ஈடுபட்டமை தொடர்பாக சுகாதார ஊழியர்களை இழிவுபடுத்தும் வகையில் வைத்தியர் பெல்லனா கடுமையாக விமர்சித்திருந்தார்.

எனவே அவர் பதவியில் இருப்பது பொருத்தமானது அல்ல என்றும் ரவி குமுதேஷ் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பெல்லனாவை பதவியில் இருந்து அகற்றும் வரை, அதிகாரிகளுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (04)

## 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை முதலாம் தவணை இன்று ஆரம்பம்!

2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளின் முதலாம் தவணை இன்று ஆரம்பமாகியுள்ளது.

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணை கடந்த வெள்ளிக்கிழமை (16) நிறைவடைந்தது. இதற்கமைய முதலாம் தவணையின் முதல் கட்டம் இன்று ஆரம்பமாகியுள்ளது. இந்தத் தவணை ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தேர்தல்கள் குறித்து கட்சிகளுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் இங்கு கலந்துரையாடப்படும் என்று தெரிய வருகிறது.

மேற்படி கலந்துரையாடல் எதிர்வரும் 27 மற்றும் மார்ச் 6 ஆம் திகதிகளில் நடைபெறும் என தெரிய வருகின்றது. (ரெப-41)

## போதைப்பொருள் கடத்தல்காரர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலருக்கும் சர்வதேச பொலிஸாரால் சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் டுபாயிலிருந்து கைது செய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட போதைப் பொருள் வர்த்தகர் சலிந்து என்பவருடன் நெருங்கிய நட்புகொண்ட அல்போமுல்ல என்ற இடத்தைச் சேர்ந்த பியுமி என்பவரிடமிருந்து பல தகவல்கள் வெளியாகி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெப-43)

## ஜனாதிபதித் தேர்தல் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளன. இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு கடந்த காலங்களில் பல தலைவர்கள் முயற்சித்தனர்.

எனவே, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நிரந்தரமாக இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறாமல் இருக்கலாம்.

அவ்வாறு இல்லையெனில் நிச்சயமாக தேர்தல் இடம்பெறும். எவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பில் நாம் இதுவரை தீர்மானம் மேற்கொள்ளவில்லை, என குறிப்பிட்டார்.

## தனியார் மயமாக்கலுக்கு எதிராக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், தேசிய வளங்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பானது அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல் தொடர்பிலான விழிப்புணர்வு நடவடிக்கைகள், அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்தல் மற்றும் தனியார் மயமாக்கலுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபைக்கு கடிதமொன்றை கையளித்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. (ரெப-42)

## நிதியின்மையால் தேர்தல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத் தேர்தல் நடத்துவதற்கு வேட்பு மனுக்களைக் கோரியதன் பின்னர் அதற்கான நிதியை விடுவிக்காமல் அந்தத் தேர்தலைப் பிற்போட்டுள்ளார்.

ஆனால், இப்போது ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கையின் ஊடாக ஒரு விடயத்தைத் தெரிவித்துள்ளது.

அதாவது, தேர்தல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும் என தெரிவித்து வருகின்றது.

அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதே அரசாங்கத்தின் பொறுப்பாகும் என இப்போது கூறுகின்றனர்.

இந்த நாட்டில் தேர்தலை நடத்துவது மற்றும் அதற்கான திகதியைத் தீர்மானிக்கு அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே காணப்படுகின்றது.

ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தியே 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டது.

ஆனால், அந்தத் தேர்தலை நடத்தவிடாது ஜனாதிபதி தன்னிச்சையாக சில தீர்மானங்களை மேற்கொண்டு தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, தேர்தலைப் பிற்போட்டுள்ளார்.

அதனால்தான் நாட்டில் மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதைத் தடுப்பதற்கும் ஜனாதிபதியால் தன்னிச்சையான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

எனவே, ஜனாதிபதியின் சதித்திட்ட வலையில் சிக்க வேண்டாம்! என சிவில் அமைப்புக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

நிதியின்மைப் பிரச்சினையால் தேர்தல் பிற்போடப்படவில்லை. ஜனாதிபதியும் மொட்டுத் தரப்பினரும் தேர்தலில் வெற்றிபெறமுடியாமை காரணமாகவே தேர்தலைப் பிற்போட்டுள்ளனர், என முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டியுள்ளார். (04)

## மன்னார்த்தீவில் அதானியின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், “சிலர் தரிசு நிலமாக - தவறாக எடைபோடும் மன்னார் தீவுப் பகுதியானது, உலகின் இடம்பெயர்ந்து வரும் பறவைகளின் பாதையான மத்திய ஆசியப் பாதையின் மையப் பிரதேசமாக அமைந்துள்ள முக்கியத்துவமிக்க ஓர் இடமாகும்.

இப்பகுதிக்கு இடம்பெயர்ந்து வருகின்ற பறவைகள் குறித்து நாம் நீண்ட நாட்களாக ஆய்வு செய்து வருகின்றோம். உண்மையில், குளிர் காலங்களில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பறவைகள் இங்கு வருகின்றன. இதற்கமைய, நூற்றாண்டு காலமாக இலங்கைக்கும் சர்வதேசத்திற்குமிடையே பிரிக்க முடி யாத ஓர் உயிரியல் உறவு உள்ளமை நிரூபணமாகியுள்ளது.

ஆகவே, இந்த உயிரியல் பிணைப்பு உட்பட, எண்ணிலடங்கா பறவைகளின் உயிர்களும் கூட குறித்த காற்றாலை மின் உற்பத்தி நிலைய அமைப்பால் இழக்கப்படவுள்ளன. எனவே, மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் மக்கள் கருத்துக் கணிப்பிற்கு இந்நாட்டின் சுற்றாடல் ஆர்வலர்கள் கூடிய விரைவில் தமது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்” என குறிப்பிட்டுள்ளார். (ரெப-39)

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
**maalaikkathir@gmail.com**



# தீபச்செல்வனின் "பயங்கரவாதி" நாவல் திருகோணமலையில் அறிமுக விழா

(ஹஸ்பர் ஏ.எச்)

ஈழ எழுத்தாளர் தீபச்செல்வனின் பயங்கரவாதி நாவல் அறிமுக விழா கடந்த சனிக்கிழமை (17) மாலை திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் கவிஞரும் ஓய்வு நிலை அதிபருமான க. யோகானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தொடக்கவுரையை கவிஞர் ஆசிரியர் தி.பவித்ரன் வழங்கினார். நிகழ்வின் பிரதம விருந்தினராக பங்கேற்றிருந்த முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி . தண்டாயுதபாணிக்கு நூல் ஆசிரியர் தீபச்செல்வன் நூலின் முதல் பிரதியை வழங்கி வைத்தார்.

நிகழ்வில் படைப்பாளர்கள், கல்வியாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# கல்முனை அஸ் ஸ்ஹறா வித்தியாலய தரம் 1 மாணவர்களின் மகிழாரம்பம்!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை அஸ் ஸ்ஹறா வித்தியாலய தரம் 1 மாணவர்களின் மகிழ்ச்சிகரமான ஆரம்பச் செயற்பாடுகளின் இறுதிநாள் நிகழ்வுகள் அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் எப்சி அமைப்பின் இணைப்பாளர் ஏ.றாஸிக், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் வை.கே.காஸிம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் எம்.ரீ.எம்.அனப், பாடசாலையின் உதவி அதிபர்களான திருமதி.நிபார், ஜ்ஹனைதீன், பகுதித் தலைவி சித்தி சபீனா, வகுப்பாசிரியர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்களின் ஆக்கக் கண் காட்சியும் ஆளுமைச் செயற்பாடுகளும் ஆற்றல் வெளிப்பாடுகளும் இடம்பெற்றன.

# சம்மாந்துறை ஸம் ஸம் பாலர் பாடசாலை வித்தியாரம்ப விழா



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட உடங்கா 1 கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள ஸம் ஸம் பகல் பராமரிப்பு பாலர் பாடசாலையின் வித்தியாரம்ப விழா சம்மாந்துறை அல் அர்சத் பாடசாலை கலாச்சார மண்டபத்தில் அண்மையில் (16) இடம்பெற்றது.

2024 ஆம் ஆண்டில் புதிதாக இணைந்துள்ள மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஏடு திறப்பு போன்ற நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றனர். இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். எம். ஹனீபா, அட்டாளைச்சேனை தேசியக் கல்வியல் கல்லூரியின் விரிவுரையாளர் கே. எல். எம். பர்ஷாத், சம்மாந்துறை அல் அர்சத் தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஏ.ரஹீம், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ. சீ. எம். சஹீல், மாணவர்களின் பெற்றோர், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சியில் இணைந்த கரங்கள் அமைப்பால் பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலத்தில் கல்வி கற்கும் 100 மாணவர்களுக்கு பாடசாலை அதிபர் திருமதி.ஜெயலட்சுமி மாணிக்கவாசகம் தலைமையில் பாடசாலையின் மண்டபத்தில் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் என்பன இணைந்த கரங்கள் அமைப்பினூடாக வழங்கி வைக்கப்பட்டன.

இப்பாடசாலையானது தேசிய சுற்றாடலுக்கான "சுவசர தக்சலாவ" ஜனாதிபதி விருதினைத் தொடர்ச்சியாக 2015, 2016, 2017 மூன்று முறை பெற்றுள்ளது. மேலும் பொலித்தின் அற்ற பாடசாலையாகவும் காணப்படுகின்றது.

இந்நிகழ்வில், இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான கஜரூபன், காந்தன், ஜெகனாதன், அவுஸ்ரேலியாவில் இருந்து வருகைத்தந்த ஜெயந்தன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.



# ரஷ்யாவில் எதிர்க்கட்சித் தலைவருக்கு அஞ்சலி 400க்கும் மேற்பட்டோர் கைதாகியதாக தகவல்



ரஷ்யாவில் எதிர்க்கட்சித் தலைவரும் அதிபர் விளாடிமிர் புடினைத் தீவிரமாக எதிர்த்து வந்தவருமான அலெக்ஸி நவால்னியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்திய 400 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அலெக்ஸி நவால்னியின் (47) மரணம் ஒரு படுகொலை!, என்று அவரது செய்தித் தொடர்பாளர் கீர் யார்மிஷ் சனிக்கிழமை தெரிவித்திருந்தார்.

நவால்னியின் உடலை குடும்பத்தினரிடம் வழங்குவதில் அதிகாரிகள் வேண்டுமென்றே தாமதம் செய்வதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. குடும்பத்தினரிடம் உடல் எப்போது ஒப்படைக்கப்படும் என்பது குறித்து உறுதியான தகவல் வெளியாகவில்லை.

இதனிடையே, ரஷ்யாவின் பல்வேறு நகரங்களில் உள்ள நினைவிடங்களில் நவால்னி மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் பங்கேற்ற 400க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டதாக அந்நாட்டின் மனித உரிமை அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

முன்னாள் வழக்குரைஞரான அலெக்ஸி நவால்னி, அதிபர் விளாடிமிர் புடினை எதிர்த்து வந்தார். இவர், சைபீரிய பகுதியைச் சேர்ந்த டாம்ஸ்க் நகரிலிருந்து மொஸ்கோவுக்கு விமானத்தில் கடந்த 2020 ஆம் ஆண்டில் சென்று கொண்டிருந்தபோது திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டு மயங்கி விழுந்தார். இதையடுத்து, அவருக்கு ஜெர்மனியில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

அவர் மீது 'நோவிசோக்' என்ற நச்சுப் பொருள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதற்கு ரஷ்ய அரசு உத்தரவிட்டதாகவும் ஜெர்மனி குற்றஞ்சாட்டியது. இதை ரஷ்யா மறுத்தது. கோமா நிலையில் சிகிச்சை பெற்று வந்த நவால்னி, கடும் போராட்டத்துக்குப் பின் உயிர் பிழைத்தார்.

2021 ஆம் ஆண்டில் ரஷ்யாவுக்குத் திரும்பிய நவால்னிக்கு தீவிரவாதக் கருத்துக்களைப் பரப்பிய குற்றச்சாட்டின் பேரில் 19 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர், சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர், திடீர் உடல்நலக் குறைவால் கடந்த வெள்ளிக்கிழமை இறந்துவிட்டதாக ரஷ்ய சிறைத்துறை அதிகாரிகள் அறிவித்தனர்.

அதேநேரம், நவால்னி படுகொலை செய்யப்பட்டதாக அவரது செய்தித் தொடர்பாளர் கீர் யார்மிஷ் தெரிவித்தார்.

ரஷ்யாவில் இன்னும் ஒரு மாதத்தில் அதிபர் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், நவால்னியின் திடீர் மரணத்துக்கான காரணம் குறித்த கேள்விகள் தீவிரமாக எழுப்பப்பட்டு வருகின்றன. (04)

# பிரிட்டனில் தங்கியுள்ள உக்ரைனியர் விசா காலத்தை நீடித்தது அரசாங்கம்



போரால் பாதிக்கப்பட்டு தங்கள் நாட்டில் தஞ்சமடைந்துள்ள உக்ரைன் நாட்டவரின் விசா காலத்தை மேலும் 18 மாதங்களுக்கு பிரிட்டன் அரசு நீட்டித்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் போர் 2022 பெப்ரவரியில் தொடங்கி சுமார் இரண்டு ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இந்த யுத்தத்தினால் 2,80,000 க்கும் மேற்பட்ட உக்ரைன் நாட்டவர் பிரிட்டனில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில், அகதிகளாக தங்கியுள்ள உக்ரைன் நாட்டவருக்கான விசா மேலும் 18 மாதங்கள் நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை பிரிட்டன் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. விசா நீடிப்பின்படி ஏற்கெனவே பிரிட்டனில் தங்கியுள்ள உக்ரைன் நாட்டவர் தங்கள் பணி, சுகாதார வசதி, கல்வி உள்ளிட்ட வசதிகளைத் தொடர்ந்து பெற முடியும்.

'உக்ரைனில் தொடர்ந்து போர் நீடித்து வருவதால் பிரிட்டனில் தங்கியுள்ள உக்ரைனியர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் இந்த விசா நீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளது' என்று பிரிட்டன் குடியேற்றத் துறை அமைச்சர் டொம் பெர்ஸ்குலோவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் டொம் மேலும் கூறுகையில், 'உக்ரைனியர்களுடன் பிரிட்டன் உறுதியாக துணை நிற்கிறது. அதேபோல உக்ரைன் மீது சட்ட விரோதமாக போர் நடத்தி வரும் ரஷ்ய அதிபர் புடினைக் கண்டிக்கிறோம். மேலும், பல உக்ரைன் குடும்பங்கள் பிரிட்டனிடம் தஞ்சமடையும்போது, அதற்கு ஏற்ப நன்கொடை தேவைப்படும்' என்றார்.

உக்ரைன் நாட்டவர்களுக்காக உக்ரைன் குடும்பத் திட்டம், உக்ரைன் உதவித் தொகைத் திட்டம், விசா கால நீட்டிப்பு உள்ளிட்ட திட்டங்களை பிரிட்டன் அரசு செயல்படுத்தி வருகிறது. (04)

# மக்கள் நீதி மய்யம் கட்சியின் 7ஆம் ஆண்டு நிறைவு விழா!

மக்கள் நீதி மய்யம் கட்சியின் ஏழாம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி வரும் 21 ஆம் திகதியன்று சிறப்பு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் பொதுச் செயலர் அருணாச்சலம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்கள் நீதி மய்யததின் 7 ஆம் ஆண்டு விழாவையொட்டி சென்னை ஆழ் வார்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் கட்சித் தலைவர் கமல்ஹாசன் வரும் 21 ஆம் திகதி காலை 10 மணியளவில், கட்சிக் கொடியை ஏற்றி வைத்து, தொண்டர்களிடையே சிறப்புரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் நிர்வாகக்குழு, செயற்குழு உறுப் பினர்கள், அமைப்பு மற்றும் அணிகளைச் சேர்ந்தோர் பங்கேற்கவுள்ளனர், எனத் தெரிவித்துள்ளார். (04)



# பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலின்போது மோசடி! பதவி விலகிய ராவல்பிண்டி ஆணையர் குற்றச்சாட்டு




பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலின்போது தலைமைத் தேர்தல் ஆணையர், தலைமை நீதிபதி ஆகியோர் மோசடியில் பங்கெடுத்ததாக, பதவி விலகியுள்ள ராவல்பிண்டி நகர ஆணையர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

எனவே, அவர்களை உடனடியாக ராஜிநாமா செய்யக் கோரி முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக் -ஏ-இன்சாஃப் (பிடிஐ) கட்சி போர்க்கொடி உயர்த்தியுள்ளது.

பாகிஸ்தான் முழுவதும் அக்கட்சியினர் போராட்டம் நடத்தி வரும் நிலையில், இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை நடத்த உயர்நிலைக் குழுவை தேர்தல் ஆணையம் அமைத்துள்ளது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது. ஊழல் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பிடிஐ கட்சியின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர்கள் அதிகபட்சமாக 93 இடங்களைக் கைப்பற்றினர். எனினும், ஆட்சியமைக்கத் தேவையான 133 இடங்கள் இல்லாத நிலையில், எந்தக் கட்சியுடனும் கூட்டணி அமைத்து ஆட்சியமைக்கப்போவதில்லை என்று இம்ரான் கான் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

அதையடுத்து, 75 இடங்களை வென்ற பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் (பிஎம்எல்-என்) நிறுவனர் நவாஸ் ஷெரீபின் இளைய சகோதரரும் முன்னாள் பிரதமருமான ஷாபாஸ் ஷெரீப் தலைமையில் புதிய அரசை அமைக்க ஆதரவு தெரிவிப்பதாக 54 இடங்களைக் கைப்பற்றி தேர்தலில் 3ஆம் இடத்தைப் பிடித்த பிலாவல் புட்டோ ஸர்தாரி தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) கட்சி தெரிவித்தது.

எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் முன்னாள் அதிபர் ஆசிஃப் அலி ஸர்தாரிக்கு பிஎம்எல்- என் கட்சி ஆதரவு தர வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் ஷாபாஸ் அரசுக்கு ஆதரவு அளிக்க பிபிபி கட்சி ஒப்புக் கொண்டது. புதிய அரசுக்கு வெளியிலிருந்து மட்டுமே ஆதரவு தெரிவிக்கப்படும் என்று முதலில் தெரிவித்த பிபிபி கட்சி, அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள பேச்சுவார்த்தையைத் தொடங்கியது.

இந்நிலையில், ராவல்பிண்டி நகரில் தோல்வியுற்ற 13 வேட்பாளர்களை வெற்றி பெற்றக அறிவித்து, மோசடியில் ஈடுபட்டதாக அந்த நகர ஆணையர் லியாகத் அலி சத்தா சனிக்கிழமை தெரிவித்தார். தேர்தல் முடிவை மாற்றி மோசடியில் ஈடுபட்டதற்காக குற்றத்தை ஒப்புக்கொண்டு தனது பதவியை ராஜிநாமா செய்த அவர், தலைமைத் தேர்தல் ஆணையர் சிக்கந்தர் சுல்தான் ராஜா, தலைமை நீதிபதி காஸி ஃபயஸ் ஈசா ஆகியோரும் இந்த மோசடியில் ஈடுபட்டிருப்பதாக குற்றஞ்சாட்டினார்.

தேர்தல் ஆணையத்தின் தாமதம் குறித்து வாக்காளர்கள் மற்றும் அரசியல் கட்சியினரிடையே ஏற்கெனவே விமர்சனம் எழுந்திருந்த சூழலில், லியாகத் அலியின் குற்றச்சாட்டு அந்நாட்டு அரசியலில் அதிர்வலையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இந்தக் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்த உயர்நிலைக் குழுவை தேர்தல் ஆணையம் அமைத்துள்ளது. குற்றச்சாட்டின் அடிப்படையில், தலைமைத் தேர்தல் ஆணையரும், தலைமை நீதிபதியும் ராஜிநாமா செய்ய வேண்டும் என பிடிஐ கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக பிடிஐ கட்சி செய்தித் தொடர்பாளர் கூறுகையில், 'பிடிஐ கட்சியுடன் இணைந்த சுயேட்சை வேட்பாளர்களுக்கு மக்கள் அதிக அளவில் வாக்களித்துள்ளனர் என்பதை லியாகத் அலியின் கூற்று உறுதிப்படுத்துகிறது. பெரும்பான்மை கட்சியான பிடிஐ, மோசடி மூலம் ஒரே இரவில் சிறுபான்மை கட்சியாக மாற்றப்பட்டுள்ளது. தேர்தல் முடிவுகளில் மோசடி செய்து, பிடிஐ கட்சியிடம் பறிக்கப்பட்ட 86 இடங்களை தேர்தல் ஆணையம் உடனடியாக திருப்பியளிக்க வேண்டும். பொதுமக்களின் வாக்குகளில் மோசடியில் ஈடுபட்ட அனைவரும் அரசமைப்பு மற்றும் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும்' என்றார். (04)

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திருக்கோவில் பயனருக்கு வீடுகளை கையளித்தார்

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் மீள்குடியேற்ற அமைச்சினால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 2023 ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட 26 பயனாளிகளுக்கு ரூபா 6 இலட்சம் மற்றும் 10 இலட்சம் பெறுமதியான வீடுகள் அமைத்துத் தரும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன் முதல் கட்டமாக பிரதேச செயலாளர்.த. கஜேந்திரனின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான டி.வீரசிங்க ஆகியோர் திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு அண்மையில் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு நிறைவுபெற்ற மூன்று வீடுகளையும் பயனாளிகளுக்குக் கையளித்தனர்.

இந்நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் திருமதி.எஸ். நிருபா, நிர்வாக உத்தியோகத்தர் ரி.மோகனராஜா,



கிராம சேவைக்கு பொறுப்பான நிருவாக உத்தியோகத்தர் என்.கந்தசாமி, திட்டத்திற்கான கள உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பயனாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# உக்ரைனுக்கு நிதியை வழங்குவதற்கு அமெரிக்க குடியரசுக் கட்சி எதிர்ப்பு!



போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனுக்கு நிதி வழங்கிக் கொண்டிருப்பதால் களநிலவரத்தில் மாற்றம் ஏற்படாது, என்று அமெரிக்க குடியரசுக் கட்சி எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஜெர்மனியின் மியூனிச் நகரில் நடைபெற்ற சர்வதேச பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்ற உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி, அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரீஸ் ஆகியோர் போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனுக்கு 60 பில்லியன் டொலர் நிதியுதவி வழங்க வேண்டும் என வலியுறுத்தினர். ரஷ்யப் படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்து அவ்டீவ்கா நகரைப் பாதுகாத்து வந்த உக்ரைன் படையினர் அந்த நகரத்திலிருந்து திருப்பி அழைக்கப் பட்டதையடுத்து அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பேசிய குடியரசுக் கட்சியின் எம்.பி. ஜே.டி. வேன்சி, ‘உக்ரைன் பிரச்சினைக்கு தெளிவான முடிவென்று ஒன்று இல்லை. அதேபோல் கிழக்கு ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள், குறிப்பாக கிழக்கு ஆசிய நாடுகளில் நடைபெறும் போர்களுக்கு அமெரிக்காவால் தொடர்ந்து ஆயுதங்கள் வழங்கிக் கொண்டிருக்க முடியாது. உக்ரைனுக்கு எவ்வளவு நிதி வழங்கினாலும் போரின் களநிலவரம் மாறாது.

கடந்த 18 மாதங்களாக வழங்கியதைப்போல் நாம் இப்போதும் ஆயுதங்கள் வழங்க வேண்டியதில்லை. உக்ரைனுக்கு எவ்வளவு நிதி வழங்கினாலும் நம்மால் போரை நிறுத்த முடியாது. போரை நிறுத்த வேண்டுமெனில் ரஷ்யா, உக்ரைன், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும், என்றார்.

வேன்சியின் உரைக்குப் பதிலளித்த ஜெர்மன் அரசில் இடம்பெற்றுள்ள ‘தி கீரீன்ஸ்’ கட்சியின் தலைவர் ரிக்கார்டா லாங், அமைதிப் பேச்சுவார்த்தையில் விருப்பமில்லை என்பதை ரஷ்ய அதிபர் புடின் தன் நடவடிக்கைகள் மூலம் அடிக்கடி வெளிப்படுத்துகிறார். உக்ரைனுக்கு ஆயுதங்கள் விநியோகிப்பதை நிறுத்துவது போரை நீடிப்புச் செய்வதற்கும் அல்லது உக்ரைனை விட்டுக்கொடுத்துவிட்டு புடினை வெற்றி பெறச் செய்வதற்கும் சமமாகும்.

ஒருவேளை புடின் வென்றால் உலக நாடுகளின் எல்லைகளை எப்படி மாற்றியமைத்தாலும் நேட்டோ நாடுகள் கண்டுகொள்ளாது என்று அவர் மட்டுமின்றி சீனா போன்ற நாடுகளும் சிந்திக்கத் தொடங்கும். இது உலகப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும். மேலும், ஐரோப்பிய நாடுகளின் சுதந்திரத்துக்கு மட்டுமின்றி அமெரிக்காவின் சுதந்திரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும், என்றார். (04)







# பெண்கள் அரசியலில் பங்களிப்பு திருகோணமலையில் செயலமர்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

AHRC நிறுவனத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் பெண்களை அரசியலில் பங்களிக்க செய்வதற்கான ஆளுமைகளை விருத்தி செய்யும் செயலமர்வு கடந்த சனிக்கிழமை திருகோணமலையில் நடாத்தப்பட்டது. இச்செயலமர்வில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பிரதேசங்களில் இயங்கும் பெண்கள் அமைப்புக்களைச் சார்ந்த 22 பெண் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கைத் தேர்தல் வரலாற்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் அல்லது பெண்களின் ஈடுபாடுகள் குறைவாகவே காணப்பட்டு வருகின்றமையினை வரலாறுகள் உணர்த்தி நிற்கின்றது. ஆனால், இன, மொழி மத பேதங்களைக் கடந்து பெண் என்ற ஒருநிலையில் பார்க்கும்போது அனைத்து பெண்களும் தேர்தலில் புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர், என்று இதன்போது குறிப்பிடப்பட்டது.

இந்நிலையில் இருந்து பெண்களை வெளிக்கொண்டு வருவதன் ஊடாக ஆளுமைத் திறன்கள் உள்ள பெண்களை இனங்கண்டு அவர்களின் தேர்தல் ஈடுபாடுகளை அதிகரிக்கச் செய்தலின் ஊடாக எதிர்காலத்தில் பெண்களின் பங்களிப்பை கூட்டுவதை நோக்கமாக கொண்டு இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.

இலங்கை மக்கள் தொகையில் 52 வீதமாக இருக்கும் பெண்களை தேர்தலின் பங்களிக்கச் செய்து அவர்களின் அரசியல் பலத்தின் ஊடாக பெண்களின் அனைத்துவிதமான உரிமைகளையும் அனுபவிக்க செய்வதனையும் நோக்காகக் கொண்டு, பெண்களை தேர்தல்களில் பங்களிக்க செய்யும் எனும் தொனிப்பொருளின் ஊடாக இச்செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் மாவட்ட ரீதியில் இயங்கும் பெண் செயற்பாட்டாளர்கள் 22 பேர் கலந்துகொண்டிருந்தனர்.

இதற்கான சட்ட ஆலோசனைகளை வழங்க சட்டத்தரணியும் திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளருமாகிய மயூரன் பிரசான்டினி, வளவாளர்களாக அகம் மனிதாபிமான வள நிலையத்தின் பெண் செயற்பாட்டாளர்களான சஞ்ஜலிதா குணாளன், நாகேஸ்வரன் மிரேகா மற்றும் பெண் செயற்பாட்டாளர்களான சிவநாதன் நிரோஜா, வேலன் குமாரி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு கௌரவிப்பு



(எஸ். சினீஸ் கான்)

மூதூர் புர்க்கானியா வித்தியாலயத்தின் 2023 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் கௌரவிப்பும் பாடசாலையின் அதிபர் இம்ரான் தலைமையில் சனிக்கிழமை (17) நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக், வலயக்கல்வி பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகளும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவப்படுத்தி பரிசிலகளும் வழங்கிவைக்கப்பட்டன.

# விறுவிறுப்பான முதலாவது ரி-20 போட்டியில் ஆப்கானிஸ்தானை வென்றது இலங்கை!



ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான முதல் ரி-20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

விறுவிறுப்பான இந்தப் போட்டியில் பெற்ற வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட் தொடரில் 1-0 என்ற கணக்கில் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளது.

தம்புள்ளை ரன்கிரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை அணி 19 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. வனிந்து ஹசரங்க 67 ஓட்டங்களையும் சதீர சமரவிக்ரம 25 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சில், பரூக்கி 3 விக்கெட்டுகளையும் நவீன் உல் ஹக் மற்றும் ஒமர் ஸாய் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 161 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணியால், 9 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களையே பெற முடிய, இலங்கை அணி 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஆப்கானிஸ்தான் அணியின் இப்ராஹிம் சத்ரான் 67 ஓட்டங்களையும், கரிம் ஜெனட் 20 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

இலங்கை அணியின் மதீஷன பத்திரன 4 விக்கெட்டுகளையும் தசுன் சானக 2 விக்கெட்டுகளையும் அஞ்சலோ மத்தியூஸ், மகேஷ் தீக்சன மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக மதீஷ பதிரன தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி இன்று அதே தம்புள்ளை ரன்கிரி மைதானத்தில் இலங்கை நேரப்படி மாலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (04)

# நற்பிட்டிமுனை முஸ்லிம்களின் வாழ்வியலும் வரலாறும் கல்முனையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழா!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

“நற்பிட்டிமுனை முஸ்லிம்களின் வாழ்வியலும் வரலாறும் “ நூல் வெளியீட்டு விழா கல்முனை ஆசாத் பிளாசா மண்டபத்தில் சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

இதில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சம்மாந்துறைத் தொகுதி அமைப்பாளருமான எம்.ஐ.எம்.மன்சூர் கலந்து கொண்டார்.

இதன் போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீமினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவர் எம். ஐ. எம். மன்சூருக்கு நூல் பிரதி வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது.








# இந்தியத் துணைத் தூதரகம் முற்றுகை யாழ் மாவட்ட மீனவர்கள் அறிவிப்பு

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடப்போவதாக யாழ் மாவட்ட மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் யாழ் மாவட்ட மீனவர்களால் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்க வேண்டும் என கோரி தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் போராட்டம் நடாத்தப்படுகிறது.

எங்கள் வயிற்றில் அடித்துக் கொண்டு, வயிற்றுப் பிழைப்புக்காக வந்தோம் - என இந்திய மீனவர்கள் கூறுவது தவறு. இந்திய அரசு கடல் எல்லையில் நின்று அத்துமீறுபவர்களைத் தடுத்தால் இந்தப் பிரச்சினை ஏற்படாது.

தமிழ் நாட்டு மீனவர்கள் அயல் மாநிலங்களுக்குச் சென்றால் இந்தியச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என்ற அச்சத்தால், தொப்புள் கொடி உறவு எனக் கூறிக்கொண்டே இங்கு அத்துமீறி வந்து தொழில் செய்கிறார்கள்.

சில நாட்களாக மயிலிட்டிப் பகுதியில் தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது.

ஆகவே, செவ்வாய்க்கிழமை (20) காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிடுவோம் - என்று அவர்கள் தெரிவித்தனர். (01)

# சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடகவியலாளர்கள் சந்திப்பு



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் அவர்களுக்கும் அம்பாறை நகர ஊடகவியலாளர்களுக்கும் இடையிலான சினேக பூர்வ சந்திப்பு அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரதேசங்களில் நிலவும் சுகாதார பிரச்சினைகள் அவற்றை நிவர்த்திக்க ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள், சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் கடந்த காலங்களில் ஆற்றிய சேவைகள் தொடர்பாக நீண்ட நேர கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது அம்பாறை பிராந்திய ஊடகவியலாளர்கள் சுகாதார சேவைகள் பணிமனையின் சகல நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும், மக்களுக்கும் - சுகாதாரத் துறைக்கும் உள்ள இடைவெளியை குறைக்க தாம் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் உறுதியளித்தனர்.

ஊடகவியலாளர்களுக்கு சுகாதாரத்துறை இடைவெளிகள், வளப்பங்கீடுகள், வளப்பற்றாக்குறை போன்ற பல விடயங்களையும் பணிப்பாளர் விளக்கினார். அத்துடன் சுகாதாரத்துறை அறிவூட்டல் நடவடிக்கை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.02.2024 இல் வெளியிடப்பெற்றது.